Registered as a News paper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 5-2-1985 செவ்வாய்க்கிழமை (தை 23–ஜ அவ் 14) முழக்கம் 1

சாரதி மரணம்; கர்ப்பிணிக்கு ஆண்குழந்தை பிறந்தது!

## நிறை மாதக் கர்ப்பிணியுடன் ஆஸ்பத்திரி சென்ற காருக்கு சூடு!

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்துக்கு முன்பாக நேற்றுக்காலை சுமார் நான்கு மணியளவில் நிறைமாதக் கர்ப்பிணி ஒருவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றபோது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கார்ச் சாரதியான நா ராமசாமி (வயது65) ஸ்தலத்திலேயே பலியானர் காரிலிருந்த கர்ப்பிணியான விஜயலட்சுமி (வயது21) அவரது கணவரான ஜெகதீசன், அயல் வீட்டுக்காரரான சண்முகம் ஆகிய மூவரும் காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், இவர்களில் ஜெகதீசனின் நிலைமை கவலைக்கிடமாகவிருப்பதாகத்

—6ம் பக்கம் பார்க்க

## முதல்வருக்கு உணர்ச்சிமிகு வரவேற்பு அமைச்சரவை 7ல் அமைக்கப்படும்

(சென்னை)

புதிய அமைச்சரவை அமைப்பது குறித்து முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் வியாழக்கிழமை தமிழக ஆளுநர் திரு எஸ் எல் குரானுவைச் சந்தித்துப் பேசக்கூடுமென முதல்வரை நேற்று அவரது ராமவரம் இல்லத்திற்குச் சென்று சந்தித்தபின் நிருபர்களிடம் ஆளுநர் இத்தகவலை வெளியிட்டார்.

இது ஓர் மரியாதை நிமித்தமான சந்திப்பு என்று கூறிய ஆளுநர், முதல்வர் உற்சாகமான மனநிலையுடனும் நல்ல உடல் நலத்துடனும் இருப்பதாகவும் தெரிவிக்கார்.

முதல்வரும், ஆளுநரும் அன்னை இந்திரா கொலை, மாநிலம் மற்றும் நாட்டு நிலைமை, பொதுத்தேர்தல் பிரதமர் பதவியேற்பு என்பன

—6ம் பக்கம் பார்க்.

# படையினரின் கொடூரம் குறையக் காரணம் தமிழ் போராளிகளே!

## கொலைகளைத் தடுக்க பாரதம் உதவுமென அமிர் நம்பிக்கை

(சென்னை)

மனித உரிமைகளைப் போற்றி மதிக்கும் ஒவ்வொரு நாடும் இலங்கையில் நடைபெறும் சம்பவங்களைத் தடுப்பதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும். தமிழ்ப் போராளிகளும் இலங்கையில் இல்லாவிட்டால் பாதுகாப்புப் படையினர் மிகக் கொடூரமாக நடந்து கொள்வார்கள் என்று கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் திருச்சியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

''அரசாங்கம் துப்பாக்கி முனையில் பொதுமக்களைக் கட்டாயப்படுத்தி தனது வேண்டுகோளுக்கு இணங்குமாறு நடாத்தக்கூடாது. ஒன்றும் அறியாத தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுப்பதன் மூலமே சுதந்திர

—6–ம் பக்கம் பார்க்க

## கொடிகள் அபேஸ்!

யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் அருகிலுள்ள பெற்றோலிய கூட்டுத்தாபன அலு

6–ஆம் பக்கம் பார்க்க

## ஊரிக்காடு புகை மண்டலம்; பலருக்கு சூட்டுக் காயம்

(வல்வெட்டித்துறை)

ஊரிக்காடு, பொலிகண்டிப் பகுதிகள் நேற்றுமுற்பகல் முதல் ஒரே புகைமண்டலமாகக் காட்சியளித்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இப்பகுதிக்கு எவரும் செல்ல முடியாதிருந்தது.

இங்கு குடியிருக்கும் மக்கள் கூட்டம் கூட்டமாக வெளி

—6ஆம் பக்கம் பார்க்க

## கிளிவெட்டியில் ஏழு பேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

(திருமலை)

திருமலை பொலிஸ் பகுதியில் நேற்று அமைதியான முறையில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

கிளிவெட்டியில் 'எல் பி 3' என்ற குடியேற்றப் பகுதியில் காடொன்றுக்குள் வைத்து ஏழு பேர் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. கா. துரைநாயகம் (25) பெ. செல்வநாயகம் (38) செ. அமிர்தநாயகம் (20) வை. தங்கத்துரை (19) த ஸ்ரனிஸ்லஸ் (25) செ. தர்மலிங்கம் (25) ஆகிய அறுவரும் மரணமானவர்களில் அடங்குவதாக அடையாளம் காட்டப்பட்

—6-ம் பக்கம் பார்க்க

## இரு சடலங்கள்

சங்கானைப் பகுதியிலுள்ள விளான் சுடலையில் கிடந்த இரண்டு சடலங்களைச் சில இளைஞர்கள் பின்னர் எரித்ததாகத் தெரியவந்துள்ளது.

## சுதந்திர தினச் செய்தியில் ஜனாதிபதி: இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பேச்சை தீவிரவாதிகள் விரும்பவில்லை!

(கொழும்பு)

''இனப்பிரச்சினையோ அல்லது வேறெந்த பிரச்சினையோ பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணவே நாம் விரும்புகிறோம். ஆனால் இதனை தீவிரவாதிகள் விரும்புகிறார்களில்லை' என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தமது சுதந்திர தினச் செய்தியில் கூறியிருக்கிறார்.

''நாட்டுக்கு இன்று பெரும் அச்சுறுத்தலாக பயங்கரவாதம இருந்து வருகிறது. பல அபிவிருத்தித் திட்டங்களும் இதனால் தடைப்பட்டுள்ளன. பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது பயங்கரவாதத்தை முறியடிக்க சகல சமயத்தவரும் ஒற்றுமையுடன் பாடுபடவேண்டும்'' என்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

பிரதமர் ஆர் பிரேமதாஸ

—6–ம் பக்கம் பார்க்க

இம்மாதம் 16 முதல் 18 வரை

## சிவராத்திரிக்காக ஊரடங்கு ரத்து?

இம்மாதம் 17–ம் திகதி அனுஷ்டிக்கப்படவிருக்கும் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு 6, 17, 18ம் திகதி ஆகிய மூன்று தினங்களில் ஊரடங்குச்சட்டம் முற்றாக நீக்கப்படலாமெனத் தெரிய வருகின்றது.

சிவராத்திரி விரதத்தன்று இரவு முழுவதும் ஆலயங்களில் பூஜைகளும், திருவிழக்களும் நடைபெறுவதாலும், இந்துசமயிகள் ஆலயங்களுக்குச் செல்லக்கூடியதாலுமே இதற்கான ஒழுங்குகள் செய்யப்படுவதாக யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

இத்தினங்களில் கேரதீவு–சங்குபபிட்டி பாதைச் சேவையையும், மன்னாருக்கான பஸ் சேவையையும் திருக்கேதீஸ்வரம் யாத்திரிகள் வசதிக்காக நடத்தவும ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## விரைவில் ஊரடங்கு நேர மாற்றம்

தற்போது அமுலிலிருக்கும் ஊரடங்குச் சட்ட நேரம் மேலும் தளர்த்தப்படலாமெனத் தெரிய வந்துள்ளது. இதன்படி இரவு 8 மணி முதல் காலை 4 மணிவரையான ஊரடங்குச் சட்டம் விரைவில் அமுலுக்குவரலாம்.

## மட்டுநகர் சம்பவங்கள்; தேசிய, கறுப்புக் கொடிகள்

(மட்டுநகர்)

சுதந்திரதினமான நேற்று மட்டுநகரில் நடைபெற்ற பல சம்பவங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரின் அரசாங்க கட்டடங்கள் சிலவற்றில் தேசியக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. அதிகமான இடங்களில் துக்கதினம் போன்று கறுத்தக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

இங்குள்ள தபாற்கந்தோரில் கட்டப்பட்டிருந்த தேசியக் கொடி இனம் தெரியாதவர்களால் அறுத்துச் செல்லப்பட்டது

களுவாஞ்சிக்குடிப் பகுதி அசம்பாவிதங்களில் பதின்

— 6ம் பக்கம் பார்க்க

## யாழ் நகரின் காட்சி இது

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் நேற்று ஹர்த்தால் தினம்போல சோபையிழந்து காணப்பட்டது. எங்கும்

—6ம் பக்கம் பார்க்க

## இன்று ஈழமுரசின் பிறந்த நாள்

ஓராண்டைப் பூர்த்தி செய்து, இரண்டாவது ஆண்டில் காலடிவைத்து, தன்முதலாவது இதழை இன்று உங்கள்முன் சமர்ப்பிக்கின்றோம்.

முரசின் முழக்கம் எண்திசையும் பரவ கடந்த பன்னிருமாதங்களாக நீங்கள் ஒவ்வொருவரும் அள்ளி வழங்கிய ஆதரவை, மானசீகமாக எண்ணிப் பார்க்கின்றோம்.

குறுகிய காலத்தில் நாம் அடைந்த அபரிமிதமான வளர்ச்சிக்கு நீங்களதான் காரணம். உங்கள் அன்பு, ஆதரவு, ஊக்கம் என்பவற்றை எமது மூலதனமாகக் கொண்டு நாம் வளர்ந்து வருகின்றோம் என்பதைப் பகிரங்கமாகவே தெரிவிப்பதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்னல் பட்டுக்கொண்டிருக்கும் இனத்தின் விடிவுக்காக ரத்தம் போராடிக்கொண்டிருக்கும் எமது தலைவர்களுடனும் இளைஞர்களுடனும ஈழமுரசும் இணைந்து தன்னாலான பங்களிப்பைச் செய்து வந்துள்ளது. தொடர்ந்தும் பங்காளியாக இருந்துவரும் என உறுதியளிக்கின்றோம்.

கடல் கடந்த நாடுகளிலிருந்தும், மேற்குநாடுகளிலிருந்தும் எமக்குக்கிடைத்து வரும் கடிதங்கள், அங்கிருக்கும்உடன் பிறப்புக்கள் 'ஈழமுரசு' மீது கொண்டிருக்கும் அபார நம்பிக்கையை எடுத்தியம்புகின்றன.

அந்த நம்பிக்கையை என்றுமசிதறடிக்கமாட்டோம்.

ஓராண்டுபூர்த்தியை குழந்தைகள், மாணவர் முதல் பெரியோர்வரையான அனைவரும் கலந்து கொள்ளும் சிறப்பான விழாவாக நடத்த திட்டமிட்டிருந்தோம். பல்வேறு போட்டிகளையும் நடத்தி, பணப்பரிசுகளை வழங்கி மாணவர்களையும் இலக்கிய வாதிகளையும் கௌரவிக்க எண்ணியிருந்தோம்.

தமிழர் வாழும் பிரதேசமெங்கும் முரசின் முழக்கம் கேட்கும் வகையில் ஓராண்டு பூர்த்தி விழாவினைக் கொண்டாட பாரிய செயற்திட்டங்களை வகுத்திருந்தோம்.

'உயிரா உரிமையா' என்று நடைபெறும் இன்றைய போராட்டத்தின் மத்தியில், இவ்வாறான ஒரு விழா அவசியமானதாக எமக்குத் தெரியவில்லை.

அடுத்தடுத்த ஆண்டு விழாக்களை, புனித பூமியில், பூத்துக் குலுங்கும் மகிழ்ச்சியுடன் கொண்டாட அன்னையின் அருளை வேண்டிக்கொண்டு, சமய, சமூக, அரசியல் தலைவர்கள், கல்விமான்களின வாழ்த்துக்கள், ஆசிகளைத் தாங்கிய இன்றைய இதழை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

ஆசிரியர்

ஈழமுரசு

# வளைகுடா யுத்தம் உக்கிரம் ஓரிரு நாளில் 513 பேர் மடிவு

(பாக்தாத்)

வளைகுடா யுத்தத்தில் இப்போது மிக உச்சக்கட்ட நிலை உருவாகியுள்ளதாக பாக்தாத், டெஹ்ரான் அறிக்கைகள் மூலம் தெரியவருகிறது. பாக்தாத் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் ஈராக் ஈரானியத் துருப்புகள் இருநூற்றுநான்கு பேரைக்கொன்று குவித்ததாகவும் ஈரானின் பல தளங்கள் தகர்த்தெறியப் பட்டதாகவும் தெரிவித்தது.

இதுவரை தான் ஈரானுக்கு எதிராக எண்பத்துஇரண்டு விமானத் தாக்குதல்களை வெற்றிகரமாக நடாத்தியுள்ளதாகவும் இவ்வறிக்கை கூறியது. இதே வேளை ஈரான் தலைநகரான டெஹ்ரானில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கை ஈராக் மீதான தமது தாக்குதல் தொடர்வதாகவும் ஈராக்கியத் துருப்புகள் முந்நூற்று எண்பதுபேர் தம்மால் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

வளைகுடா யுத்தத்தில் ஈராக் ஈரானின் பொருளாதாரத்தை வீழ்த்தி ஒழிக்கும் முயற்சியாக ஈரானின் எண்ணெய்க் கப்பல்கள் மீது விமானத் தாக்குதல் நடத்தி வருவதுடன் நிலத் தாக்குதலையும் ஆரம்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க டி. வியில் ராஜீவ் பேட்டி

(வாஷிங்டன்)

பாரதப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி நிகழ்த்திய உரையை அமெரிக்க மக்கள் தொலைக்காட்சியில் கண்டு களித்தனர். புதுடில்லியில் நடைபெற்ற ஆறுநாடுகளின் உச்சி மாநாட்டினையொட்டிய வேளை அமெரிக்கத் தொலைக்காட்சிக்குப் பிரதமர் அளித்த பேட்டியினையே அமெரிக்க மக்கள் காணும் வாய்ப்புப் பெற்றனர்.

## ஏகாதிபத்திய அச்சுறுத்தல்

(பெங்களூர்)

''எதிர்க்கட்சிகள் ஒடுக்கப் படாது நியாயபூர்வமாக நடத்தப்பட்டால் அவை மத்திய அரசுக்கு ஆதரவளிப்பதில் பின்நிற்காது'' என்று பாரத மார்க்ஸிஸ்ட கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. நம்பூதிரிபாட் பெங்களூரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் நேற்றுப் பேசுகையில் கூறினர் ''ஏகாதிபத்திய சக்திகளின் அச்சுறுத்தல் உருவாகியுள்ள இவ்வேளையில் மத்தியில் பலவீன அரசு இருக்கக்கூடாது எனவே மத்திய அரசுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்கும்'' என்றும் அவர் சொன்னர்.

## என். டி. ஆர். எச்சரிக்கை

(ஹைதராபாத்)

''வகுப்புவாதம், சாதி வேற்றுமை என்பன நாட்டு முன்னேற்றத்திற்குக் குந்தகம் விளைவிக்கும்'' என்று ஆந்திர முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் நேற்று எச்சரித்தார்.

## ஆந்திர தேர்தல்: பாஸ்கரராவும் மும்முரம்

(ஹைதராபாத்)

ஆந்திர முன்னாள் முதலமைச்சர் திரு. பாஸ்கரராவின் ஜனநாயகத் தெலுங்கு தேசம் கட்சி சட்டசபைத் தேர்தலில் 138 தொகுதிகளில் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளது. முதலமைச்சர் திரு என். டி. ராமராவின் தெலுங்கு தேசம் கட்சி நேற்றுவரை 114 தொகுதிகளில் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளது. 255 தொகுதிகளில் இக்கட்சி போட்டியிடுகிறது. திரு. ராமராவ் கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள கொடிவாடாவில் போட்டியிடுகிறார்.

மதுரையில் கோரச் சம்பவம்

## மலைச்சரிவில் பஸ் புரண்டது 16 பேர் மடிவு: 52 பேர் காயம்

(மதுரை)

மதுரையில் வத்தலக்குண்டு என்ற இடத்தில் நேற்று நிகழ்ந்த கோர பஸ் விபத்து ஒன்றில் ஸ்தலத்திலேயே பதினாறு பேர் மாண்டனர் ஐம்பத்து இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

வளைவொன்றில் பஸ் திரும்புகையில் மலைச்சரிவில் உருண்டு விழுந்ததாகவும் காயமடைந்தோர் மதுரை, திண்டுக்கல் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வெள்ளியன்று செயற்பாடு

(கட்டார்)

முதல் அராபிய செயற்கைக்கோள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை செயற்படுத்தப்படவுள்ளது.

## வற்புறுத்தலால் உறவு முறிவு

(பெங்களூர்)

''சட்டசபைத் தேர்தலில் தமக்கு 32 இடங்கள் தேவை என பி. ஜே. பி. வற்புறுத்தி நின்றதால் அக்கட்சியுடன் உடன்பாடு சாத்தியமற்றுவிட்டது'' என்று கர்னாடக முதலமைச்சர் திரு ராமகிருஷ்ண ஹெக்டே நேற்றுத் தெரிவித்தார். ''உடன்பாட்டுக்கு ஜனதாக் கட்சி மிகுந்தளவு முயன்றது. முடியவில்லை'' என்றும் அவர் சொன்னார்.

## விடுதலை கிடைக்கும்?

(கேப்டவுன்)

தென்னாபிரிக்கக் கறுப்பர் இனத் தலைவரான மண்டெலா வன்முறைகளைக் கைவிட்டால் வெள்ளையர் ஆட்சியால் விடுவிக்கப்படுவார் என்று ஜனாதிபதி பி. டபிள்யு. போதா கூறியுள்ளார்,

## வரிவிளம்பரம்

எப்பொருளானாலும் வாங்கவும் விற்கவும் தினமும் வாருங்கள். ஏலவிற்பனை நிலையம் கோப்பாய்.

### தவறிவிட்டது

துரைச்சாமி சிறீராசவன்—அடையாள அட்டையும், பல்கலைக்கழகப் பாதுகாப்புப்பிரிவு அட்டையும் கோப்பாய் - இருபாலைக்கிடையில் தவறிவிட்டது சன்மானம் தரப்படும். தொடர்பு—பல்கலைக்கழகம் திருநெல்வேலி

## ராணுவ செலவுகளை கூட்ட ஜனாதிபதி றீகன் முற்படுகிறார்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனால்ட் றீகன் 1986ம் ஆண்டு பட்ஜட்டில் இராணுவ நடவடிக்கைகளுக்கான செலவுகளை அதிகரிப்பார் என்று வாஷிங்டன் அறிக்கைகள் நேற்றுத் தெரிவித்தன.

மார்ச் மாதம் 12ம் திகதி ஜெனீவாவில் சோவியத் யூனியனுடன் நடைபெறவுள்ள அணு ஆயுதப் பரிகரணம் சம்பந்தமான பேச்சு வார்த்தைகளின்போது இதுபற்றிய சர்ச்சை உருவாகலாம் எனக் கூறப்படுகிறது.




✻ வவுனியா யாழ் வீதி குமரசுந்தரம் சுசிலாதேவி தம்பதிகளின் மகள் கஸ்தூரி இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ யாழ்-ஆரியகுளம் பாலசிங்கம் நாகேஸ்வரி தம்பதிகளின் மகள் பாமினி இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ யாழ்-கண்டிவீதி நவரத்தினம் தனலட்சுமி தம்பதிகளின் மகன் கோபிகிருஷ்ணா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ கொக்குவில் சிவநாதன் கமலாதேவி தம்பதிகளின் மகள் சங்கீதா இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ யாழ்-பிரப்பங்குளம் வீதி யோகராசா சந்திரா தம்பதிகளின் மகள் தட்ஷாஜினி இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ நயினாதீவு சண்முகராஜா குருக்கள் தம்பதிகளின் மகள் சுமதி இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## ''ஆக்கபூர்வ அணுகுமுறை வேண்டும்''

(மாஸ்கோ)

அமெரிக்கா சம அளவு சமபந்தோபஸ்து என்ற அடிப்படையில் ஆக்கபூர்வமான அணுகுமுறையை அணு ஆயுத உற்பத்தித் தடை விடயத்தில் கைக்கொள்ள வேண்டும் என்று சோவியத் யூனியனும் செக்கோசிலேவேகியாவும் அமெரிக்காவைக் கேட்டுக் கொண்டுள்ளன. மாஸ்கோவில் இவ்விரு நாடுகளினதும் வெளிநாட்டமைச்சர்களின் சந்திப்பின் பின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இவ்விதம் கோரப்பட்டுள்ளது.

## அமெரிக்க நிலைப்பாடு: சூல்ட்ஸ் விளக்கம்

(வாஷிங்டன்)

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு சூல்ட்ஸ், வாஷிங்டனில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், ஜனநாயகத்தின் எதிர்காலம் மத்திய அமெரிக்காவில் பிரச்சினைக்குரியதாயுள்ளது என்று குறிப்பிட்டு ஜனநாயகத்தை நாடுவோரை நாம் கைவிட்டால் தீவிரவாதிகள் முன்னேறுவர் மத்திய அமெரிக்காவில் மட்டுமன்றி பிற இடங்களுக்கும் கம்யூனிஸ எதிர்ப்பு சக்திகளுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும்'' என்று கூறியுள்ளார்.


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**



பேராதனை, கொழும்பு, ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகங்களின் வெளிநிலை விரிவுரைகள்

கல்வியாண்டு 1985/86

இலங்கை பல்கலைக் கழகங்களின் வெளிநிலை பாடநெறிகளான

✻ கலை முதற் தேர்வு
✻ விஞ்ஞான முதற் தேர்வு (புள்ளி விபரவியல்)
✻ சட்ட முதற் தேர்வு
✻ வணிக முதற் தேர்வு

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்திபெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் 10-2-85ல் ஆரம்பமாகின்றன.

விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 5/ செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு; ஏற்கனவே விண்ணப்பித்த மாணவர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

உதவிப் பதிவாளர்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 23715.



**மாதாந்தம் 36% வட்டி விழாக்கால சலுகை!**

15-12-84 முதல்-

05-02-85 வரை

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்

**தமிழர் நிதியம்**

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

ஈழமுரசு

முதலாவது பிறந்தநாள்

5.2.1985 செவ்வாய்க்கிழமை

## மக்கள் மத்தியில் ஈழமுரசு நன்மதிப்பு பெற்றுள்ளது

'ஈழமுரசு' இரண்டாவது ஆண்டுப்பருவம் அடைவதை முன்னிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம்



பேருமுனையில நட்டுக்குச் சீரிய தொண்டாற்றுவது 'ஈழமுரசு' போன்ற பத்திரிகைகளே என்பதை நிச்சயமாகக் கூறலாம். அதுவும் தகுதியும் பேரறிவும் வாய்ந்த ஆசிரியர் அறிஞர்கள் உள்ளிருந்து தற்போதைய நிலைமையில் நாட்டுக்கு வேண்டிய செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிடுவது போற்றற்குரியது.

'ஈழமுரசு' மக்கள் மத்தியில் நல்ல மதிப்புப் பெற்றிருப்பதை நாம் அறிவோம். இதேபோன்று மேன்மேலும் வளர்ந்தோங்கி, நாட்டு மக்களுக்கு சீரிய சேவைபுரிய வேண்டுமென இறையருளைச் சிந்தித்து உளமார ஆசீர்வதிக்கின்றோம். ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

— ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## வீறுநடை போட வாழ்த்துக்கள்

"யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் "ஈழமுரசு" பத்திரிகை தனது முதலாவது ஆண்டு நிறைவுதினத்தை கொண்டாடும் இவ்வேளையில் எனது வாழ்த்துக்களைச் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். நாட்டு நடப்புக்களை உடனுக்குடன் வெளியிடும் சிறப்பம்சத்தை இப்பத்திரிகையில் நான் அவதானித்தேன். தொடர்ந்து முன்னேற்றப்பாதையில் வீறு நடைபோட எனது வாழ்த்துக்கள்.

மௌலவி ஓ. எம். அப்துர் ரஸ்ஸாக் ஆலிம் (ஜமாலி)
ஹதீப் (B)
புதுப்பள்ளி வாசல்
யாழ்ப்பாணம்

## திடத்துடனும் தெளிவுடனும் ஈழமுரசு வெளிவருகிறது

பத்திரிகை ஒரு காலக்கண்ணாடி. பொதுமனப் பளிங்கு. குறைகளைச் சுட்டிக்காட்டி, தவறுகளை இடித்துரைத்து நிறுத்துரைக்கும் துலாக்கோல். நெஞ்சத்து நேர்மையும், நீதியில் உயர்வும் உண்மையிற் பற்றும் நன்மையில் நாட்டமும் கொண்டு செய்திகளை வெளியிடும் புனிதமான சேவையின் தூது.

இந்த இலட்சணங்களை உறுதியாகக் கடைப்பிடிக்கவேண்டுமென்ற உயர் நோக்குடன் ஓராண்டு காலம் எதிர்ப்புக்களின் மத்தியிலும் எதிர்நீச்சலிட்டு நாள்தோறும் வெளிவரும் இதழ் "ஈழமுரசு"

திடத்தோடும் தெளிவோடும் திட்டமிட்டுச் செய்திகளை வெளியிடும் ஈழமுரசுக்கு என் இதயங்கனிந்த வாழ்த்துக்கள்,

இன்றைய சூழ்நிலையில் இலட்சியக் கடனுற்ற ஆர்வங்கொண்டுழைக்கும் 'ஈழமுரசு'



இன்னும் பல்லாண்டு காலம் நல்லபணியாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்,

வ. தியோகுப்பிள்ளை
யாழ். மறைமாவட்ட ஆயர்

## முதிய தினசரிகளுக்கும் ஈடுகொடுக்கும் பத்திரிகை

எம். பஞ்சலிங்கம் அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.

'ஈழமுரசு' வட பகுதியிலிருந்து வெளிவரும் தேசியத் தினசரிகளுள் ஒன்று. கடந்த ஓராண்டுக்குள்ளேயே அதன்



துரித வளர்ச்சியைக் காணக்கூடியதாக இருப்பது எல்லோரும் அறிந்த நிதர்சன உண்மை. எத்தனையோ இக்கட்டான நிலைமைகளுக்கிடையிலும் தன் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாத்து மக்களுக்கும் நாட்டுக்கும் ஆற்றிவரும் பெரும் பணியைக் கண்டு மட்டிலா ஆனந்தமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

தடைபலதாண்டி எடுத்த ஈடுப்பிலேயே தனக்கெனவோர் பிரத்தியேகமான இடத்தைப் பிடித்துக் கொண்டு நிற்கும் "ஈழமுரசு" ஓராண்டு நிரம்பிய - ஆரோக்கியமான தோர் - பூரணவளர்ச்சி எய்திய - கம்பீரமான நடைபோடும் குழந்தையாகக் காணும் போது அதுவும் மற்றவர்கள் மனந்திறந்து பாராட்டும் மனப்பூர்வமான வார்த்தைகளைக் கேட்கும்போது உண்மையிலேயே மெய்மறந்து இறும்பூதெய்துகின்றேன்.

உண்மைகளை அந்தரங்க சுத்தியுடனும், அதேவேளை மிகுந்த அவதானத்துடனும், உடனுக்குடன் யாரையும் பாதிக்காத வகையில் செய்திகளாக மக்களுக்குக் கொடுக்கும் அதன் ஆற்றலும் அறிவும், பெருமையும் மேன்மேலும் வளரவதாக.

நடுநிலைமையும், தெளிவும், செறிவும், நுட்பமும் கொண்டதாக, ஏனைய முதிய தினசரிகளுக்கெல்லாம் ஈடுகொடுத்துத் தன்னை முதன்மைப்படுத்தி நிற்கும் ஈழமுரசு அத்தடத்திலேயே தொடர்ந்தும ஆற்றிடத்தக்க வலுவும் திறனும் மேலும் பெருகத்தக்க வழிவகைகளையும் வலுப்படுத்துக்

— 5ம் பக்கம் பார்க்க



## பண்டிதமணி ஐயாவின் ஆசிகள்

ஈழமுரசு ஈழத்துச் சம்பவங்களையேயன்றி இந்தியச் சம்பவங்களையும் மற்றும் பிறநாட்டுச் சம்பவங்களையும் வெளியிட்டு வருவதும், அறிவு விருத்திக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்ற வகையில் அமைந்திருப்பது பெருமகிழ்ச்சிக்குரியது.

ஈழமுரசு என்றும் நின்று நிலவுவதாக என்று வாழ்த்துவோமாக.

— சி. கணபதிப்பிள்ளை

## வளர்ச்சிப் படிகள்

ஈழமுரசு 1984ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ம் திகதி ஞாயிறு மலராக தனது முதலாவது இதழை வெளியிட்டது. ஏப்ரல் மாதம் 15ம் திகதி வரை வார இதழாக மட்டும் வெளியானது. 1984 ஏப்ரல் 18ம் திகதி புதன்கிழமை முதலாவது "புதன் இதழ்" வெளியாயிற்று. அன்று முதல் வாரம் இரு இதழாக புதன், ஞாயிற்றுக் கிழமைகளில் வெளிவரத் தொடங்கியது. 1984 செப்டம்பர் 10ம் திகதி முதல் தினசரியாக வெளிவர ஆரம்பித்தது.

## சிரேஷ்ட பத்திரிகைகளுடன் ஏறுநடை போடுகின்றது

— உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர்

ஈழமுரசிற்கு இன்று ஒரு வயது. சிறு குழந்தை என்றாலும் விரல் சூப்பித்திரியும் குழந்தையல்ல. இது விஷயம் அறிந்த குழந்தை.

உமை அம்மை கொடுத்த ஞானப்பாலை உண்ட சம்பந்தர், ஐம்பதையும் தாண்டிய அப்பர்சுவாமிகளுடன் எவ்வாறு சரி நிகராக நின்றனரோ, அதேபோல ஈழமுரசும் சிரேஷ்ட பத்திரிகைகளுடன் ஏறுநடைபோட்டுச் செல்வது பத்திரிகையாளர் உலகத்துக்குப் பேருவகையைத் தருகின்றது.

தமிழ்பேசும் இனத்தின் சரிதையிலே இன்றைய காலகட்டம் மிக முக்கியமானது என்பதனை நாம் நினைவூட்டத் தேவையில்லை. பல பிரச்சினைகள், பல கஷ்டங்களுக்கிடையே பத்திரிகையாளர்கள் பணியாற்ற வேண்டிய நிலை இது. இப்பகைப் புலத்தில் ஈழமுரசினை நோக்கும்போது



இதன் பணியும் பங்களிப்பும் எத்துணை முக்கியமானவை என்பது தெளிவாகும்.

பத்திரிகை காலத்தின் கண்ணாடி என்றார் சுத்தானந்த பாரதியார். எனவே இக்கண்ணாடி இனவரலாற்றினை ஆய்

— 5ம் பக்கம் பார்க்க

## ஓராண்டிலேயே ஈழமுரசு துரிதவளர்ச்சி கண்டுள்ளது

— அமைச்சர் எஸ். தொண்டமான்

'ஈழமுரசு' பத்திரிகை தனது ஓராண்டுப் பூர்த்தியை இன்று கொண்டாடுகிறது. அதனை வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு பத்திரிகையை உருவாக்கி நடத்துவதென்பது மிகக் கடினமான ஒரு செயலாகும். பொதுவாக நமது நாட்டில் தலைநகரிலேயே பத்திரிகைகள் தோன்றி வளர்ந்துள்ளன. பிராந்திய மட்டத்தில் பத்திரிகைகள் தோன்றுவதென்பதும் அதைவிடத் தோன்றி வளர்வதென்பதும் மிக அரிதான ஒரு நிகழ்ச்சியே.

இந்த வகையில் ஈழமுரசு ஒருபிராந்தியத்திலிருந்து வரும் தேசியப் பத்திரிகையாகத் தோன்றி வளர்ந்துள்ளதென்பது பாராட்டப்பட வேண்டியதே. தலைநகர் பத்திரிகைகளுக்குள்ள எந்த வசதியும் சலுகையும் இல்லாத நிலையிலும் இப்பத்திரிகை அவற்றையொத்த ஒரு வளர்ச்சியைப் பெற்றிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

வடபகுதி மக்களின் மத்தியில் உருவான ஈழமுரசு அந்த மக்களின் பிரச்சினைகள், அரசி



யல், கலை கலாசாரங்கள் ஆகியவற்றைப் பிரதிபலித்தும் வளர்த்தும் அந்த மக்களுக்கு செய்திகளையளித்தும் சேவை

— 5ம் பக்கம் பார்க்க

உதய சிந்தனை

பத்திரிகையாளர்களின் பேனா, அரசியல்வாதிகளின் நாக்கைவிடக் கூர்மையானது, அடக்கி ஆளும் தன்மையானது. -மகாத்மா காந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

## இதய ஒலி

5-2-85 செவ்வாய்க்கிழமை (இரத்தாக்ஷி தை 23)

# ஓராண்டுப் பணியில் உங்கள் முன் நாங்கள்

''ஜெயபேரிகை கொட்டடா கொட்டடா'' என்று அன்று பாரதி முழங்கினான். அந்த முழக்கத்தின் எக்காளமாக, எதிரொலியாக ஈழமணித் திருநாட்டிலே 'ஈழமுரசு' தனது முதல் முழக்கத்தை இன்று தொடங்குகின்றது.

இலங்கைத் தமிழர்கள் வாழ்விலே மறுமலர்ச்சிக்கான சிந்தனைகளை, செயற்பாடுகளையெல்லாம் சிருற எடுத்து மொழியும் நல்லதொரு சாதனமாய் 'ஈழமுரசு' விளங்கிடும் என்று உறுதி செய்கின்றோம்...''

சரியாக ஓராண்டுக்கு முன்னர், 1984ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ம் திகதி, ஈழமுரசின் முதலாவது இதழின் ஆசிரிய தலையங்கத்தை இவ்வாறுதான் ஆரம்பித்திருந்தோம்.

அன்று நாம் சொன்னதை, ஓரளவுக்கேனும் இதய சுத்தியுடன் செயற்படுத்தி வந்துள்ளோம் என்ற ஆத்ம திருப்தியுடன், முதலாவது பிறந்தநாளில் உங்கள் முன்னால் நிற்கின்றோம்.

மிக மிக நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில், வாழ்வா சாவா என்ற தமிழினத்தின் ஜீவமரணப் போராட்டச் சகாப்தத்தில், உண்மை, நேர்மை, சத்தியம் என்பவற்றை ஆதார சுருதியாகக் கொண்டு நாம் எடுத்த பணியைத் தொடுத்து வந்துள்ளோம்.

உருண்டு, தவழ்ந்து, நிமிர்ந்து, விரல் சூப்பித் திரியும் குழந்தையாகவே நாங்கள் இருக்கின்றோம். ஆனாலும், எமது செய்திப் பணியை, தமிழ்ப் பணியை, பத்திரிகைப் பணியை, கற்றறிந்த சான்றோர்கள், சமய, சமூகத் தலைவர்கள், அரசியல் மாமேதைகள் வளர்ந்த, முதிர்ந்த பத்திரிகைகளுடன் ஒப்பிட்டுப் புள்ளி வழங்குகிறார்கள். அந்தப் பாராட்டுக்களை அடக்கத்தோடு ஏற்றுக் கொள்ளுகின்றோம்.

ஞாயிறு மலராக மலர்ந்து, வாரம் இரு இதழாக விரிந்து, 84 செப்டம்பர் பத்து முதல் தினசரியாக வெளிவரும் ஈழமுரசின் வளர்ச்சியும், உயர்ச்சியும் எமது அன்பான வாசகப் பெருமக்கள் எமக்குத் தந்த உற்சாகத்தின் பெறுபேறுகள்.

எந்த ஒரு பக்கமும் சாராது, எந்த ஒரு அரசியலிலும் அள்ளுப்பட்டுச் செல்லாது, எந்த ஒரு குழுவினருக்கும் துதிபாடாது, நடுநிலை நின்று ஆற்றி வரும் பணியினாலேயே ஓராண்டுக்குள் விற்பனையிலும், வாசகர் தொகையிலும் ஈழமுரசு முதலிடத்தைப் பெற்றுள்ளது என்பது சான்றோர்களின் கணிப்பு

ஆட்சியாளர்களுக்குப் பயந்தும், அரசியலாளர்களுக்கு வளைந்தும் கொடுக்காத ஈழமுரசின் பேனா முனை, தொடர்ந்தும் நேராகவே, உண்மையைக் குத்திக் காட்டித் தன் பணியைத் தொடரும் என்பதை இன்றைய தினத்தில் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

ஈழமுரசின் ஓராண்டு வாழ்க்கையை இரை மீட்டுப் பார்க்கின்றோம். எம்முடன் ஒத்துழைத்த வணிகர்கள், வாசகர்கள் எம் முன்னால் ஒளிபிறக்கக் காட்சி தருகின்றார்கள்.

எமது அலுவலகத்துக்கு அடிக்கடி தரிசனம் கொடுத்து, எம்மையும் தங்கள் அலுவலகத்துக்குத் தரிசனம் கொடுக்க வைத்த அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர் எம் முன்னால் தோற்றமளிக்கிறார்கள்.

எமது வளர்ச்சி கண்டு மன அதிர்ச்சி கொண்டு, எம்மைத் தூற்றுவதன் மூலம், மக்கள் மத்தியில் எமக்கு ஏற்றம் பெற்றுத் தந்த 'சகோதரர்கள்' எம் முன்னால் தெரிகின்றார்கள்.

எத்தனையோ தடைகளையும், எத்தனையோ படைகளையும் தாண்டி ஈழமுரசு தனது இரண்டாவது ஆண்டில் இன்று காலடி எடுத்து வைக்கின்றது.

''தமிழ் பேசும் மக்களின் கடந்த காலச் சம்பவங்களை மனதில் பதித்து, நிகழ்காலச் சம்பவங்களை உரமாக மதித்து, எதிர்காலச் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப ஈழமுரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது'' என்று செப்டம்பர் பத்தில் வெளியான முதலாவது தினசரி இதழில் குறிப்பிட்டதையே இன்று மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

இறைவன் ஆசியும், வாசகர் ஆதரவும் என்றும் எமக்குத் தேவை.


# இன விடுதலைப் பணியில் ஈழமுரசின் தனிப் பங்களிப்பு

**அ. அமிர்தலிங்கம்**
**செயலாளர் நாயகம்**
**தமிழர் விடுதலைக் கூட்டணி**

ஈழம்வாழ் தமிழ் மக்களின் வரலாற்றில் மிகவும் இக்கட்டான இன்றைய காலகட்டத்தில் ஒரு தமிழ்ப்பத்திரிகை துணிவோடு, மக்களின் எண்ணப்பாட்டை பிரதிபலிக்கும் விதத்தில் செயலாற்றுவது மிகவும் சிரமமான பணியாகும்.

ஓர்வருடப்பொதுப்பணியை சிறப்போடு நிறைவுசெய்துள்ள ''ஈழமுரசு'' அரசின அடக்குமுறைச்சட்டங்களுக்குவளைந்து கொடாது-பத்திரிகா தர்மத்தின் அடிப்படையில் செயற்பட்டமை பாராட்டப்பட வேண்டியதே.

சனநாயகம் நிலைப்பதற்கு பத்திரிகைகளின் பங்களிப்பு மிகமிக அவசியமானது. இந்த அடிப்படையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட சனநாயகவிரோத நடவடிக்கைகளை கோடிட்டுக்காட்டி தமிழர்களை விழிப்புறச்செய்ததுடன் அநீதியின் பிறப்பிடங்களின் இதயங்களை உறக்கத்திலிருந்து எழச்செய்துள்ளது. கடந்த ஒருவருட காலமாக எமதுமண்ணில் இடம்பெற்ற பயங்கர மரணபய, சோகநிகழ்வுகளையெல்லாம் படம்பிடித்துக்காட்டி தமிழ் மக்களின் அவல நிலையை நீக்கும் பெரும் பணிக்கு 'ஈழமுரசு' தனது



பங்களிப்பை நிறைவு செய்துள்ளது.

ஒரு பத்திரிகை செய்தியை முந்தித்தருவது சிறப்பானதே. ஆனால் அச்செய்தி நீதியின் அடிப்படையில்திரிக்கப்படாது சமூக நலனை பேணி பாது காக்கும் விதத்தில் அமைய வேண்டியது அதிமுக்கியமானதாகும்.

இந்தவரையறைகளை மீறாது 'ஈழமுரசு' தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் ஒரு சிறந்த நாளேடாக மக்கள் மத்தியில் நிலைத்துள்ளது.

''ஆனைவரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே'' என்ற பழமொழிக்கிணங்க நாளை வரும் நிகழ்வுகளையும் விளைவுகளையும் அனுமான அடிப்படையில் முற்கூட்டியே மக்கள் முன் வைப்பதில் ஈழமுரசு தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுள்ளது.

நெருக்கடியான நேரங்களில் நிதானத்தை நிலைநிறுத்த நீதி கிடைக்கச்செய்ய சுதந்திரமான பத்திரிகை எத்தகைய பங்களிப்பை செய்ய முடியுமென்பதை கடந்த ஒருவருட காலமாக 'ஈழமுரசு' நிரூபித்துள்ளது

அரசு சார்ந்த பல பத்திரிகைகள் தமிழருக்கு இழைக்கப்படும் அநீதிகளை திரித்தும் மூடிமறைத்தும் செய்தி வெளியிட்டு வரும் இந்நாளில் ஈழமுரசு' துணிவோடு நீதியான கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைப்பதன்மூலம் சுதந்திரமான நாளேடென்பதை நிலைநிறுத்தியுள்ளது. மக்களின் அன்றாட வாழ்க்கை கஷ்டங்கள் சமூகப்பிணக்குகள் பற்றிய விடயங்களில் ஈழமுரசு இதயஒலி மக்கள் குரலாக ஒலிப்பதை உணரமுடிகிறது.

ஓராண்டை நிறைவு செய்யும் ஈழமுரசு தனது நீதிக்காக குரல் கொடுக்கும் பணியைச் சிறப்போடு தொடர என் வாழ்த்துக்கள்!

# எந்தப் பக்கமும் சாராத மக்கள் தினசரி ஈழமுரசு

**குமார் பொன்னம்பலம்**
**பொதுச் செயலாளர் - அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்**

தமிழ் தேசிய இனத்தின் இதயக் குரலாக வெளிவந்த வண்ணமிருக்கும் ஈழமுரசிற்கு அதன் வெற்றிப் பவனி தொடங்கி ஓராண்டு நிறைவு பெறுகின்ற இவ்வேளையில் எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும்தெரிவித்துக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தேசியப் பத்திரிகைக்குரிய வரைவிலக்கணத்திற்கு அமைய, பக்கம் சாராது பல்வேறுஅரசியல் கருத்துக்களும், செய்திகளும் மக்களைச் சென்றடையச் செய்யவேண்டும்என்ற நோக்கத்தோடு நேர்மையாகப் பணியாற்றி வருகின்றது ஈழமுரசு. இத்தகையதொரு பத்திரிகைதான் இன்று தமிழ் மக்களுக்குத் தேவைப்படுகின்றது.

சொந்த அரசியல் கருத்துக்களைத் திணிக்காமல், மக்கள் தம் அரசியல் அறிவையும், உலக விவகாரங்கள் பற்றிய அறிவையும் வளர்த்துச் சுயமாகச் சிந்தித்துச் சுதந்திரமாக முடிவெடுக்கக் கூடிய வகையில் பல்வேறு செய்திகளைப் பாரபட்சமின்றி வெளியிடும் ஈழமுரசு பத்திரிகையின் சமுதாயப் பணி தொடர வேண்டும். பல்லாண்டுகளுக்கும் அது நிலைக்கவேண்டும்.

தமிழ் மண்ணில் நாளாந்தம் நடைபெறும் சம்பவங்களை அதிகாலையிலேயே மக்களுக்குத் தெரியப்படுத்துவதிலும், பல்வேறு பத்திரிகைகளும் பிந்தித் தருகின்ற செய்திகளை முந்தித் தருவதிலும், தனித் திறமையினைப் பெற்றிருக்கின்றது ஈழமுரசு. ஓராண்டு காலத்துக்குள் விற்பனைத் தொகையிலும் வாசகர் தொகையிலும் பிரமிக்கத்தக்க வகையில் ஈழமுரசு தனிச் சாதனையீட்டியிருப்பதற்கு இதுவே காரணம் ஆகும்.



ஈழமுரசுவின் இதய ஒலி தமிழ்ச் சமுதாயத்தின் சுதந்திர உணர்வை வெளிப்படுத்தியும் ஆட்சியாளர்களால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கடுமையாகக் கண்டித்தும் மிகுந்த துணிச்சலோடும், சொல்லாற்றலோடும் வெளியாகின்றது வேறெந்தத் தமிழ்ப் பத்திரிகையிலும் காணக்கிடைக்காத தனிச் சிறப்பு இதுவாகும். இப் பெருமைபேணப்படவேண்டும். ''ஈழமுரசு'' தொடர்ந்தும் தனது எழுத்துப் பணியை தமிழ்ப் பணியைச் செய்ய எனது நல்வாழ்த்துக்கள்.

## துணிவுக்கு வாழ்த்து

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு ஐ. எஸ் ஸ்ரீபாஸ்கரன் ஈழமுரசுக்கு எழுதிய ஒரு கடிதத்தை இங்கு பிரசுரிக்கின்றோம்.

தங்கள் பத்திரிகையில் வெளிவரும் தங்கள் கருத்துக்களை ஆசிரியத் தலையங்கத்தில் துணிவுடனும் தைரியத்துடனும் பத்திரிகைத் தர்மவழி நின்று காலத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு வெளியிடுவதைப் பாராட்டுவதுடன்

—5ம் பக்கம் பார்க்க

# தமிழ் மக்கள் காலையிலே அதிகஆர்வத்துடன்படிக்கும் செய்தித்தாள் 'ஈழமுரசு'

ஓராண்டு நிறைவு ஆரவாரத்தோடு, பெருமகிழ்ச்சியோடு கொண்டாடப்படுவது வழக்கம். குழந்தையின் முதலாவது ஆண்டு விழா விமரிசையாகக் கொண்டாடப்படுவது போல, ஈழமுரசின் ஓராண்டு நிறைவுக் கொண்டாட்டமும் பெரிதாகப் பேசப்பட வேண்டியதொன்று. கடந்த ஓராண்டு காலத்தில் ஈழமுரசு சாதித்தவற்றைக் கணிப்பதும் அவசியமாகும். இச்செய்தித்தாள் தனது பெயருக்கேற்ப ஈழத்தமிழரின் செய்திகளை முழங்கும் முரசாக அமைந்துள்ளது. இன்றைய சூழ்நிலையில் ஈழத்தமிழரின் பல்வகைப்பட்ட பிரச்சினைகளை படம் பிடித்துக் காட்டும் செய்தித்தாளாக இது விளங்குகின்றது வாசகரின் தேவையை மனங்கொண்டு வேகமாகவும், சிறப்பாகவும் செய்திகளை வெளியிடுவதிலேயே ஈழமுரசு தனியிடம் வகிக்கின்றது.

சுடச்சுடக் காலதாமதமின்றிச் செய்திகள் இதில் வெளிவருவது குறிப்பிட வேண்டிய ஒரு அம்சமாகும். தமிழ் மக்கள் காலையிலே அதிக ஆவத்துடன் படிக்கும் ஒரு செய்தித்தாளாக இது நிலையான இடத்தைப் பெற்று விட்டது.

கடந்த ஓராண்டு கால எல்லையில் தமிழர் வாழும் பகுதிகளில் நாளுக்கு நாள் பல நிகழ்ச்சிகள் மக்கள் வாழ்க்கையைப் பாதிப்பனவாக நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றைப் பத்திரிகா தர்மம் வழுவாது உடனுக்குடன் ஈழமுரசு வெளியிட்டு வருவதோடு, இவை பற்றிய தனது அபிப்பிராயங்களையும், பிரசனைகளுக்குத் தீர்வு காண்பதற்குரிய ஆலோசனைகளையும் துணிவோடு கூறி வருகின்றது.

ஈழமுரசு ஆசிரியர் மகா கெட்டிக்காரன். நாளாந்த நடவடிக்கைகளைப் பற்றிய தனது அபிப்பிராயங்களை அவை ஆட்சியாளருக்கு உகந்தவையில்லாவிட்டாலும், நெஞ்சுரத்துடன், அவற்றினாலே தனக்கு ஏற்படக்கூடிய விளைவுகளையும் பொருட்படுத்தாது வெளியிடுவது ஏனைய பத்திரிகை ஆசிரியர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இன்றைய காலகட்டத்தில் இத்தகைய மனத்தூய்மை



யான, காரசாரமான பிறரைச் சிந்திக்கச் செய்யும் அபிப்பிராயங்களே தேவையானவை. இதனாலேயே ஈழமுரசு வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் எமது பல்கலைக் கழகம் பற்றிய செய்திகளை பத்திரிகா தர்மத்துடன் ஈழமுரசு வெளியிட்டு வந்திருக்கின்றது. நிர்வாகத்துக்கும் மாணவர்களுக்குமிடையே உறவு வளரக் கூடிய வகையில ஈழமுரசு செயற்பட்டு வருகின்றது.

ஈழமுரசு பிறந்த நாளிலிருந்து ஒரு வயதடையும் வரை அதன் வளர்ச்சியில ஆதரவு காட்டிய வாசகர், அந்நிறுவனத்தின மதிப்பைப் பெற்றவர்களாவர். இக் குழந்தையை திருக்கடியின மதியற் சீராக வளர்த்தெடுக்க அதன நிர்வாகி, ஆசிரியர், ஊழியர்கள அனைவரும எடுத்த நடவடிக்கைகளுக்காக அவரைப் பாராட்டுகின்றேம். இக் குழந்தை வரும ஆண்டுகளிற் பொலிவுடன வளர்ச்சியுறறு ஈழத்துத தமிழ் மக்களின தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்யும சாதனமாக விளங்க இறைவன் அருள் வாராக!

## பேராசிரியர் சு. வித்தியானந்தன்

### துணைவேந்தர்
### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

## சிரேஷ்ட பத்திரிகை...

— 3-ம் பக்கத் தொடர்

வோருக்கு உதவுகின்ற சாதனமாகவும் அமைய வேண்டுமல்லவா? ஆசிரியர் எஸ். திருச்செல்வம் (எஸ்தி) அனுபவம் மிக்க செய்தியாளர். ஆற்றல் மிக்கவர். சிறந்த அமைப்பாளர். தமிழ் உளளத்தை நன்கு அறிந்தவர். ஓராண்டு காலத்தில் இவர் நிலைநாட்டிய சாதனை பாராட்டப்பட வேண்டியது. ஈழமுரசும், தமிழன்பர் அதுபா அமிர்தரும நீடு வாழ வேண்டுமென எமது உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் வாழ்த்துகின்றது.

— இ. சிவகுருநாதன்
தலைவர்,
இலங்கை உழைக்கும்
பத்திரிகையாளர் சங்கம்

## புதிய தினசரி....

— 3-ம பக்கத் தொடர்

கொள்ள வேண்டும். சமூக நலனை வளப்படுத்து வழிகாட்டக் கூடிய நலலாக்கங்களை, நவீன சிந்தனைகளைத் தருவதில் முன்னணி வகிக்கும தினசரியான ஈழமுரசுவின ஆதயஒலி மேலும புதுமையருக்கு பெறறு முழங்கட்டும.

ஈழமுரசு இன்னும் புதுப் பொலிவும் தனித திறனும் பெற்று, நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஏற்றதான தன நற்பணியை பலலாண்டு பல்லாண்டு தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

● சில குறிப்புகள்

# தமிழ் நாள் இதழ்களின் வளர்ச்சி

★ சபா. ஜெயராசா எம். ஏ.

''விரைந்து செய்தி தரல்''— ''தவறின்றித் தருதல்'' என்ற இரண்டு இறக்கைகளையும் இணைத்துச் செய்தித் தாள்கள் செயற்பட வேண்டியுள்ளன. விரைந்து செய்தி தந்தமையாற் தவறு நிகழ்ந்துவிட்டதென்று செய்தித் தாள்கள் தப்பிக்கொள்ள முடியாது. இந்த இரு பாரம்பரியங்களும் செய்தித் தாள்களின் சமூக நெம்புகோல்களுடன் இணைந்தவை.

செய்தித் தாள்கள் தூய தொடர்பு வடிவின் தோற்றங்களன்று. அவற்றின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் வேரும் விளைநிலமுமாகச் சமூகமும், சமூக மாற்றங்கள் விளங்கின. தமிழின் முதலாவது பத்திரிகை 1831ஆம் ஆண்டு சென்னையில் வெளிவந்த ''தமிழ் மகஸின்'' ஆகும். இந்த முதலாவது மலர்ச்சி ஆங்கிலேய ராட்சியின் பன்முகப்பட்ட விளைவுகளின் துளிர்த்தலாக அமைந்தது.

கிறிஸ்தவ சமயப் பிரசாரங்களுடன் இணைந்த உதயதாரகை 1841ஆம் ஆண்டு வெளிவந்தமையும், தேசிய சமய மறுமலர்ச்சியாளர்கள் பத்திரிகையை வலிமைமிகு தொடர்புச் சாதனமாகப் பயன்படுத்த முற்பட்டமையும் தமிழ்ப் பத்திரிகை வரலாற்றிற் பிரதான நிகழ்ச்சிச் சின்னங்களாகவிளங்குகின்றன.

பிரித்தானியராட்சியிற் பத்திரிகை இயக்கங்கள் ஏகாதிபத்திய மனோபாவங்களுக்கு எதிரான கோட்பாட்டுப் பலத்தைக் கொண்டிருந்தன சேர். டி. முத்துசாமிஐயர் உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்றமையை இந்தியாவிலே வெளிவந்த ஆங்கிலோ-இந்திய இதழ்கள் பலமாக எதிர்த்தன. இந்த நிகழ்ச்சியின் தூண்டல் திரு ஜி. சுப்பிரமணிய ஐயர் ''இந்து'' ஆங்கில இதழைத் தோற்றுவிக்கும் ஓர் பொறியாக அமைந்தது. 1878ஆம் ஆண்டு ''இந்து'' பத்திரிகை வெளிவரத் தொடங்கியமையைத் தொடர்ந்து திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் தமிழில் ''சுதேசமித்திரன்'' இதழைத் தோற்றுவித்தார். இந்த இதழ்கள் அடிமட்ட மக்களின் உணர்ச்சிகளைத் தழுவிச் செல்லாமையிற் ''திராவிடன்'' நாள் இதழ் ஆரம்பிக்கப்பட்டது.

சாதி உணர்வுகளுக்கு எதிரான இலட்சியமும, பகுத்தறிவு வாதமும் ''திராவிடன்'' இதழ்களின் செயற்பாடுகளுக்கு உற்சாகமூட்டின. தமிழக இதழ்களின் இந்த இருமைப் பாங்கான கோலம் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்த ஒரு பண்பாகவும் காணப்படுகின்றது.

தமிழ் நாளிதழ்களின் படிமலர்ச்சியிற் காணப்படும் பிறிதொருபண்பு அவைவார இதழ்களாக இருந்து பின்னர் நாள் இதழ்களாக முன்னேற்றம் பெற்றகோலமாகும். 1882ஆம் ஆண்டு வார இதழாக வெளிவந்த ''சுதேசமித்திரன்'' 1899இல் நாள் இதழாக வெளிவரத் தொடங்கியது. வார இதழ்களாக வெளிவந்து நாள் இதழ்களாக மாறிய படி மலர்ச்சி, யாழ்ப்பாணத்து நாள் இதழ்களான ''ஈழநாடு'', ''ஈழமுரசு'' போன்றவற்றிடத்தும் காணப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் ''பத்திரிகை எழுத்தறிவு'' என்ற விஷயத்தை நோக்குதல் வேண்டும். எழுத்தறிவு என்பது சாதாரணமாக எழுத வாசிக்கத் தெரியும் பண்பினைக் குறிபிடும். எழுத்தறிவை வாழ்க்கை மேம்பாட்டுக்குப் பயன்படுத்தும் பொழுது அது 'செயற்படு எழுத்தறிவு' என்று அழைக்கப்படும். ''பத்திரிகை எழுத்தறிவு'' என்பது பத்திரிகைகளை வாசித்து விளங்கிப் பயன்படுத்தும் திறனைக் குறிப்பிடும், இந்தியாவின்சுதந்திரப் போராட்டமும், திராவிட இயக்கமும், அவற்றுடன் இணைந்து வந்த கல்வி வளர்ச்சியும் பத்திரிகை எழுத்தறிவை வளர்த்தன.

இலங்கையில் டொனமூர் அரசியற்றிட்டம் வழங்கிய அனைத்து வயது வந்தோர் வாக்குரிமையும், கல்வியின் விரிவும், 'வீரகேசரி'', ''தினகரன்'', ''ஈழகேசரி'' போன்ற பத்திரிகைகள் தோன்றுவதற்கும், வளர்ச்சி பெறுவதற்கும் பின்னணி நிலைமைகளாக அமைந்தன. இந்திய சுதந்திரப் போராட்டம, முதலாம உலகப் போர் முதலியவை இலங்கையின் பத்திரிகை எழுத்தறிவு விசை கொண்டுவளர ஆரம்பநிலைகளிலே துணை செய்தன.

நாள் இதழ்களை வாசிக்கும் பத்திரிகை எழுத்தறிவின் படிமலர்ச்சியின் அடுத்தகட்டம் 1956ஆம் ஆண்டுகளில் மிகத் தீவிரம் பெறலாயிற்று. சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் இந்நாட்டு அரசியலிலே

—6-ம் பக்கம் பார்க்க

# ஓராண்டில் பூரித்த தமிழர் குழந்தை!

-- 'நவாலியூர்க் கவிராயர்' --

ஈழத்திற்கு முரசறையப் பிறந்தாய்
ஈராண்டின் ஜனனம் இன்றுனக்கு!
தாளத்தின் சுருதியாய் காலடிகள்
தான்பதித்து நடக்கின்றாய் வாழியவே!

வாரத்தில் வந்தநடை பத்தாவென்று
வாரித்தான் அணைத்தோம் தினந்தோறும்!
வீரத்தை விளைக்க முத்தமிழும்
வீறோடு தான்மொழிந்து வளர்கின்றாய்!

துப்பாக்கி வேட்டுக்கள், குண்டுமழை
துளைத்தனவும் காதுகளில் கேட்டனவே!
தப்பாமல் அத்தனையும் மழலைமொழி
ததும்புகின்ற தமிழ்தந்த இதழுனதே!

வாகனங்கள் இறுமிச்செலும் வீதிகளில்
வனந்தரமாய் காட்சிதந்த கோலங்களை
பாலகனாய் வளர்கின்ற காலங்களில்
பாதித்து வளர்ந்ததால் நிமிர்கின்றாய்!

ஓராண்டில் பூரித்த குழந்தைகளில்
உனக்குநிகர் எதனைத்தான் கூறுவது?
தீராதாம் 'கெலி'யெமக்கு எந்நாளும
தீந்தமிழில் முரசறைந்து வருகுதயே!

## ஓராண்டிலேயே ...

— 3-ம் பக்கத் தொடர்

யாற்றும் நோக்கினைக் கொண்டமைகிறது. தோன்றிய ஓராண்டிற்குள்ளேயே மக்கள் மத்தியில இது பெற்றுள்ள மதிப்பும் செல்வாக்கும இப்பத்திரிகை தனது தரத்திலும் நோக்கத்திலும எந்தளவு முழுமையும் வெற்றியும் பெற்றுள்ள தென்பதைக்காட்டுகிறது.

ஈழமுரசு மேலும் பல ஆண்டுகளைக் கண்டு பீடு நடைபோட எனது நலவாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நானும் அதன் மகிழ்வில் பங்கு கொள்கிறேன்.

## துணிவுக்கு...

—4ம் பக்கத் தொடர்

நல்வாழ்த்துகளையும் தெரிவிக்கின்றேன். அவற்றை வாசிக்காத ஒரு நாள் தானும இல்லை. தங்களைப் போன்ற பல எழுத்தாளர்கள் தமிழர்மத்தியில் காலத்திற்குக்காலம தோன்ற வேண்டுமென்றும் தங்கள் தொண்டு பலகாலம் தொடரவேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஈழமுரசு

## பொலிகண்டிச் சம்பவம்; சென்னையில் வெளியான அறிக்கை

(சென்னை)

பொலிகண்டியில் ஜனவரி மாதம் முப்பதாம் திகதி இருபதுபேர் கொல்லப்பட்டதாகவும் அவர்கள் வந்த வாகனங்கள் இரண்டு அழிக்கப்பட்டதாகவும் சென்னையில் வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பு ஒன்று கூறுகிறது. இச்சம்பவத்தின்போது இவர்களில் நாற்பதுபேர் பிணைக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டனர் என்ற செய்தியை இக்குறிப்பு மறுத்துள்ளது.

### மீனம்பாக்கம் விமான நிலையத்தில்

# நலமுடன் திரும்பிய தமிழக முதல்வர் புன்னகையுடன் கைஅசைத்துமகிழ்ச்சி

(சென்னை)

நியுயோர்க்கில் வெற்றிகரமாக நடைபெற்ற மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சையின பின் தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி இராமச்சந்திரன் நேற்றுக்காலை சென்னைமீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்கியதும் நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவருக்கு மாலையணிவித்து வரவேற்றார். காரில் ஏறிய முதலமைசசர் புன்னகையுடன் மக்களை நோக்கிக் கை அசைத்த வண்ணம் பரங்கிமலையில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்ற இடத்துக்குச் சென்றார்.

நியுயோர்க்கிலிருந்து பம்பாய் விமான நிலயத்திற்கு நேற்றுககாலை நான்குபத்துக்கு வந்து சேர்ந்த விமானம் அதிகாலை ஐந்து நாற்பத்தைந்துக்கு மீனம்பாக்கம் வந்தடைந்தது. முன்னதாக பம்பாய் விமான நிலயத்தை இரவு பன்னிரண்டு ஐம்பத்தைந்துக்கு விமானம் வந்து சேர்ந்த போது மகாராஷ்டிரா



நிதியமைச்சர் முதல்வரை வரவேற்று வாழ்த்துத் தெரிவித்தார். முதல்வருடன் வந்த டாக்டர் குழு அவர் நல்லநிலையில் இருப்பதாகத் தெரிவித்தது.

பம்பாயிலிருந்து பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் சார்பாக மத்திய மந்திரி, சமூக நலத்துறை இணையமைச்சர் திருமதி. மரகதம் சந்திரசேகரும முதல்வருடன் சென்னை வந்தார்.

மீனம்பாக்கம் விமான நிலயத்தில் கடும்பனிமூட்டம் காரணமாக முதல்வர் விமானத்தில் இருந்து இறங்குவதில் தாமதம் ஏற்பட்டது. காலை ஆறு நாற்பதுக்கு முதல்வர் விமானத்தில் இருந்து இறங்கினார்.

## நேரடி நடவடிக்கை எடுக்க பாரதத்திடம் கோரிக்கை

(திருச்சி)

''வன்முறைகளைத் தடுத்து நிறுத்தி இலங்கைத் தமிழர்களைக் காக்க நேரடி நடவடிக்கையில் பாரதம் இறங்க வேண்டும்'' என்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று திருச்சியில் நடைபெற்ற பலநாட்டுத் தமிழர் மைப்பின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது

இக்கூட்டத்திற்கு திரு தமிழ்க்குடிமகன் தலைமை தாங்கினார்.

பலநாட்டுத் தலைவர்களும் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் பேசுகையில் ''இலங்கை அரசு இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்கப் பேச்சுவார்த்தைக்குக் கட்டுப்படாது தமிழினத்தைப் பூண்டோடு அழிக்க எல்லாச் சந்தர்ப்பங்களையும் இலங்கை அரசு பயன்படுத்துகிறது'' என்று சொன்னார்

### முதல்வருக்கு...

—1-ஆம் பக்கத் தொடர்

குறித்து இருபது நிமிடங்கள் வரை உரையாடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தன்னைக் கண்டதும் எதிர்கொண்டழைத்து முதல்வர் அணைத்துக் கொண்டதாகவும் விடை பெற்றபோது வாசல் வரை வந்து அனுப்பி வழியனுப்பியதாகவும ஆளுநர் தெரிவித்தார்.

முன்னதாக விமான நிலயத்தில் நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், அ. தி மு. க பொதுச் செயலாளர் திரு. ப. உ. சண்முகம் ஆகியோர் முதல்வரை வரவேற்றனர்.

விமானத்திலிருந்து இறங்குகையில் வெகு உற்சாகமாகக் காணப்பட்ட முதல்வர் தனக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட வானில் ஏற மறுத்து தனது சொந்த 'அம்பாஸிடர்' காரிலேயே ஏறி வரவேற்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பரங்கிமலைக்குச் சென்றார். அவருடன்மனைவி வி. என். ஜானகியும் சென்றார்.

தம் அன்புத் தலைவரான முதல்வரைக் கண்டதும் அங்கு திரண்டிருந்த பல இலட்சக் கணக்கான மக்கள் ஆனந்த ஆரவாரம் செய்து 'நீடூழி வாழ வேண்டும்' என்று உணர்ச்சிக் கோஷம் எழுப்பினார்கள். தனக்கு அருகில்

திரு. ம. பொ. சிவஞானத்தையும், சபாநாயகர் திரு. ராஜாராமையும் முதல்வர் அழைத்தவேளையும் ஒவ்வொருவரையும் கட்டியணைத்துப் பாசத்தைப் பொழிந்த வேளையிலும் மக்கள் கரவொலி எழுப்பித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். முதல்வர் இரு கரங்களையும் கூப்பி வணக்கம் செலுத்தியதுடன் அடிக்கடி வலக்கரத்தைத் தூக்கிக் காட்டியதுதான் நன்று இருப்பதை மக்களுக்குப் புரிய வைப்பதற்காகவே எனக் கருதப்பட்டது

### படையினரின்..

— 1-ம் பக்கத் தொடர்

தினம் கொண்டாடப்பட வேண்டும் என்றும் திரு. அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை தடுத்து நிறுத்த இந்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் எனத் தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழர்கள் அதிகமாக வசிக்கும் இடங்களில் வன்முறைகளை தடுத்து நிறுத்தவேண்டுமானால் அப்பகுதிகளிலுள்ள ஆயுதப் படைகளை வாபஸ் பெறவேண்டும்'' என்றும் திரு அமிர்தலிங்கம் குறிப்பிட்டுச் சொன்னார்.

### இனப் பிரச்சினை...

—1ம் பக்கத் தொடர்

தனது செய்தியில், ''சுதந்திரத்தைக் கட்டிக்காக்கும் போராட்டத்தில் நம்மை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்' எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது இவ்வாறு இருக்க சுதந்திர தினவிழா கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுர மைதானத்தில் நேற்றுக்காலை சம்பிரதாய பூர்வமாகக் கொண்டாடப்பட்டது சுமார் முப்பது ஊர்திகளும் ஊர்வலத்தில் இடம் பெற்றன

### கொடிகள்...

— 1-ம் பக்கத் தொடர்

வலகம். சுன்னாகம் புகையிரத நிலையம் ஆகியவற்றில் நேற்றுப் பறக்கவிடப்பட்ட தேசியக்கொடிகள், சிலமணி நேரத்தில் இனம் தெரியாதவர்களால் கழற்றப்பட்டன

### கிளிவெட்டியில்...

—1ஆம் பக்கத் தொடர்

டுள்ளனர்

இதேவேளை நிலாவெளியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு, எரிப்புச் சம்பவம் சம்பந்தமாக படைவீரர்கள் நேற்று முழுவதும் இங்கு கடும் சோதனைகளை மேற்கொண்டனர்.

### தமிழ் நாள் இதழ்...

— 5-ஆம் பக்கத் தொடர்

விசைகொள்ளத் தொடங்க நாளிதழ்களை வாசிக்கும் பழக்கம். இலங்கையிற் பரவலாக வளர்ந்தது. மத்தியதர வகுப்பினரிடம் காணப்பட்ட பத்திரிகை வாங்கும் வழக்கம் தொழிலாளர்களிடத்தும் பரவத் தொடங்கியது.

இக்காலப் பகுதியைத் தொடர்ந்து சமாந்தரமாகப் பல நிகழ்ச்சிகள் ஒன்றிணைந்து செயற்படத் தொடங்கின. தாய்மொழிக் கல்வியின் விரிவு, இடதுசாரி இயக்கங்களின் வளர்ச்சி, இலக்கிய ஆக்கப் பணிகளில் இலங்கை முற்போககு எழுத்தாளர் சங்கம் மிக்க விசையுடன் தொழிற்பாடு கொண்டமை, முற்போக்கு எழுத்தாளராகிய க. கைலாசபதி அவர்கள் ''தினகரன்'' ஆசிரியராகப் பதவியேற்றமை போன்றவை இலங்கைத் தமிழ் நாள் இதழ் வளர்ச்சியுடன் இணைந்து நின்றன.

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே கட்டியெழுப்பப்பட்ட வாசிப்பு எழுத்தறிவின மீது, புதிய வேர்களைப் பரப்புதல் ஒருபுறம் இலகுவாக இருந்தாலும, மறுபுறம் தரக்கட்டுப்பாட்டை மேம்படுத்த வேண்டிய கடினமும் காணப்பட்டது இந்த இலகுவும், கடினமும் இன்றைய சூழலிலே தோன்றியுள்ள ''ஈழமுரசு'' நாள் இதழுக்கும் பொருந்தும்.

கொழும்பு நாள் இதழ்கள் இலக்கிய எழுத்தாளர்களுடன் கொண்டுள்ள தோழமை, யாழ்ப்பாணத்து நாள் இதழ்களிடத்தும் இயக்க வடிவிலே காணப்படுதல், மீண்டும் இந்நாட்டு நாளிதழ்களுக்குரிய தனித்துவமான பாரம்பரியத்தை மீள வலியுறுத்தல் செய்கின்றது.

### யாழ்நகரின்...

—1ம் பக்கத் தொடர்

கொடிகள் பறக்கவிடப்படவில்லை. கடைகள் பூட்டப்பட்டிருந்தன. வாகனங்கள் காணப்படவில்லை. சிறுடையினர் மட்டுமே இடையிடையே காணப்பட்டனர், பொது மக்கள் நடமாட்டம் இருக்கவில்லை. வடபிரதேச போக்குவரத்துச் சபை பஸ்கள்கூட தேசியக் கொடியின்றி சேவையிலீடுபட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

### மட்டுநகர்..

—1ம் பக்கத் தொடர்

மூன்று வயதுச் சிறுவன் ஒருவன் மரணமானதாகத் தெரிய வந்துள்ளது இங்கு பல கடைகள் தீக்கிரையானதாகவும் தெரியவந்துள்ளது.

### நிறை மாதக்...

—1ம பக்கத் தொடர்

தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே, கர்ப்பிணியான விஜயலட்சுமி காலில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்கு சிகிச்சை பெற்ற சில நிமிடங்களில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். தாயும் சேயும சுகமே இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன

இச்சம்பவம் பற்றி அரசு விடுத்த செய்திக் குறிப்பில, பாதுகாப்புப் படையினரின் உத்தரவை மீறிச் சென்ற கார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### ஊரிக்காடு ..

—1ம பக்கத் தொடர்

யேறிக் கொண்டிருந்தனர். பலர் ஆலயங்கள், பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இங்கு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஒருவர் அபாயகரமான நிலையில் அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டார். சம்பவம் நடைபெற்ற இடத்தில் மேலும் பலர் சூட்டுக்கு இரையானதாகவும் தெரியவந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இப்பகுதியில் நடைபெற்ற சம்பவமொன்றே நேற்றைய அசம்பாவிதத்துக்கு காரணமெனக் கூறப்படுகிறது.

குழந்தைப் பருவத்தில் முதிர்ந்து நடைபோடும் ஈழமுரசு தொடர்ந்து வீர நடைபோட அதன் முதலாவது பிறந்த நாளில் வாழ்த்துகின்றோம்!

பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23631

ஈழமுரசு சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்றர்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 5-2-85 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.